## ஆகஸ்ட் 5 முதல் பாடசாலை பகிஷ்கரிப்பு!

சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் சாகும்வரை உண்ணுவிரதத்துக்கு அனுதாபம் தெரிவித்து தமிழ்ஈழ மடங்கிலும் ஆகஸ்ட் 5 முதல் பாடசாலைகளை தொடர்ச்சியாக பகிஷ்கரிப்பதற்கு தமிழ் மாணவ மாணவிகள் தீர்மானித்திருக்கிறார்கள். பல்வேறு கல்லூரிகளின் உயர் வகுப்பு மாணவ மன்றங்கள் இதிலே ஈடுபட தீர்மானித்துள்ளன.

# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 35.

வள்ளுவர் ஆண்டு 2007 ஆடி 20 | ஷஃபான் 7 | (4-8-76) புதன் புத்தகம் 30 | இதழ் 30

# தமிழ் ஈழப் பிரிவினை கோரும் சட்ட மறுப்பு சுவரொட்டிகள்!

## ஆயிரக்கணக்கானோர் ஒட்டினர்! இயக்கம் பூரண வெற்றி; அடுத்த நடவடிக்கையென்ன?

**திருகோணமலை மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்ட மறுப்பு நடவடிக்கைகள் யூலை 31ம் திகதி தமிழ் ஈழமடங்கிலும் பரவலாக ஆரம்பிக்கப்பட்டன. தமிழ் ஈழத்தைப் பிரித்துக்காட்டும படங்களையும், தமிழ் ஈழப்பிரிவினையை வலியுறுத்தும் சுலோகங்கள் எழுதப்பட்ட சுவரொட்டிகளையும் யூலை 31ம் நாள் தமிழ் ஈழத்தின் ஒவ்வொரு தொகுதிகளிலும் பிரதான இடங்களில் ஒட்டியதன் மூலம் கூட்டணித் தலைவர்களும் ஆயிரக்கணக்கான கூட்டணித்தொண்டர்களும் அவசரகாலப் பிரமாணங்களை பகிரங்கமாக மீறினார்கள். இச்சட்ட மறுப்பு இயக்கம் பூரணவெற்றியடைந்ததை யடுத்து தனது அடுத்த சட்டமறுப்பு நடவடிக்கையிலிறங்கத் தமிழர் விடுதலைக்கூட்டணி தயாராகி வருகிறது. தனது அடுத்த நடவடிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணியின் போராட்டக்குழு எந்த நிமிடமும் அறிவிக்கும் என்று தெரிகிறது.**

யூலை 23முதல் 30 வரை சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யக் கோரும் இயக்கத்தை நடத்துவதென்றும், யூலை 31ம் திகதி முதல் சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பிப்பதென்றும் யூலை 9, 10ம் நாட்களில் திருக்கோணமலையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிறப்பு மாநாட்டில் தீர்மானித்ததற்கமைய, சிறையிருக்கும் இளைஞர் வாரத்தையடுத்து யூலை 31ம் நாள் தமிழர் விடுதலைக்கூட்டணி தனது சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பித்தது.

**அரசியலமைப்பைத் தகர்ப்போம் — நாட்டைப் பிரித்து வாழ்வை அமைப்போம்—இலங்கைக் குடியரசு வேண்டாம்— ஈழத் தமிழ்நாடு அமைப்போம்.''**

என்று எழுதப்பட்ட சுவரொட்டிகளையும் தமிழ் ஈழத்தையும் சிங்கள நாட்டையும் தனித்தனியே பிரித்துக் காட்டும் படங்களையும் தமிழ் ஈழத்தின் ஒவ்வொரு தொகுதியிலும் 25 முக்கிய இடங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களும் தொண்டர்களுமாக பொலிசாருக்கு முன்கூட்டியே அறிவித்துவிட்டுப் பகிரங்கமாக ஒட்டினர். அவசர காலப் பிரமாணங்களைமீறி நடைபெற்ற இச்சட்ட மறுப்பு இயக்கத்தில் ஆயிரக்கணக்கானோர் ஈடுபட்டனர். எனினும் வடமாகாணத்தில் சட்டத்தை மீறியவர்களை கைதுசெய்ய பொலிசார் முன்வரவில்லை. கிழக்கு மாகாணத்தில் மட்டும் சில இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டபின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண மாநகரத்தில் பஸ்நிலையம், மாநகராட்சிமன்றம், நீதிமன்றம் போன்ற முக்கிய இடங்களில் சட்டத்தரணிகள் அடலேறு ஆலாலசுந்தரம் வெ. யோகேஸ்வரன், தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த மதிமுகராசா, நா. த. செல்லத்துரை, திரு. குணரத்தினம் ஆகியோர் தலைமையில் பொலிசாரின் கண் எதிரிலேயே சட்ட மறுப்பு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

இதேபோல் ஒவ்வொரு தொகுதியிலும் அந்தந்த தொகுதி பா. உ. க்களின் தலைமையில் சட்டமறுப்பு இயக்கம் விறுவிறுப்புடன் நடைபெற்றது.

வவுனியாத் தொகுதியிலும் வவுனியா பா. உ. திரு. சே. மா. செல்லத்தம்பு தலைமையில் தமிழ்ஈழப் பிரிவினை கோரும் சட்டமறுப்பு சுவரொட்டிகள் பல இடங்களில் ஒட்டப்பட்டன. முல்லைத் தீவு, தண்ணியூற்று, புதுக்குடியிருப்பு, நெடுங்கேணி, கொக்குத்தொடுவாய், வவுனியா ஆகிய இடங்களில் இச்சட்ட மறுப்பு இயக்கம் நடைபெற்றதுடன், தமிழ்

—3-ம் பக்கம் பார்க்க

## உடுப்பிட்டி சிவா பேசுகிறார்

இன்று (4-8-76) கொழும்பில் தந்தை செல்வாவின் இல்லத்தில் நடைபெறும் தமிழர் விடுதலைக்கூட்டணி கொழும்புக் கிளையின் வாராந்தக் கருத்தரங்கில் உடுப்பிட்டி முன்னாள் பா. உ.வும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபர்களில் ஒருவருமான திரு. மு. சிவசிதம்பரம் கலந்து கொண்டு, "இளைஞர்களின் உண்ணுவிரதப் போராட்டமும் நமது கடமையும்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுகிறார்.

# "எங்கள் பிணத்தின் மீது கூட்டுச்சேரா மாநாடு நடைபெறட்டும்!"

## சிறையில் சாகும்வரை உண்ணுவிரதம் நாளை ஆரம்பம்!

ஏற்கெனவே அறிவித்திருந்தபடி ஆண்டுக்கணக்காக விசாரணையின்றி சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் "சாகும்வரை உண்ணுவிரத இயக்கம்" நாளை (5-8-76) வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஆரம்பமாகிறது. முதலாவது கட்டமாக ஐந்து இளைஞர்கள் நாளை இந்த ஆத்மீகப்போராட்டத்தில் இறங்குகிறார்கள். கவிஞர் காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா, பொ. சத்தியசிலன், பொ. வ. திசைவீரசிங்கம், த. முத்துக்குமாரசுவாமி ஆகியோரே நாளை உண்ணுவிரதத்தை ஆரம்பிக்கின்றனர்.

ஆகஸ்ட் 5ம் திகதிக்கு முன்னர் விசாரணையின்றி ஆண்டுக்கணக்காக சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ்

—4-ம் பக்கம் பார்க்க

# தமிழ் ஈழமடங்கிலும் அனுதாப உண்ணுவிரதங்கள்

நீதியான கோரிக்கையொன்றை முன்வைத்து சிறைசாலையில் தமிழ்இளைஞர்கள் ஆகஸ்ட் 5ம் நாள் ஆரம்பிக்கும் சாகும்வரை உண்ணுவிரதத்துக்கு தங்கள் பூரண ஆதரவைத்தெரிவித்தும், இந்த இளைஞர்களின் கோரிக்கையின்பால் அரசின் கவனத்தைத் திருப்புவதற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழ் இளைஞர் பேரவையும் தமிழ் மகளிர்பேரவையும் கூட்டாக பல்வேறு நடவடிக்கைகளில் இறங்கவிருக்கின்றன. இதன் முன்னேடியாக தமிழ் ஈழமடங்கிலும் ஒரு நாள் அடையாள அனுதாப உண்ணுவிரதங்கள் பரவலாக நடைபெறவிருக்கின்றன.

**ஆகஸ்ட் 5ம் திகதிக்கு முன்சிறையிருக்கும் தமிழ்**

—3-ம் பக்கம் பார்க்க

தமிழ் ஈழத் தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ் ஈழம் நோக்கி வருக!'

## மலையகத் தமிழர்களுக்கு ஈழவேந்தன் அழைப்பு!

சென்ற 25-7-76 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணியளவில் இலங்கைத்தொழிலாளர் கழகம் மாபெரும் கூட்டத்தினை அ. புதுக்காடு கி. பி. (ஒலிரூட்) தலவாக்கொல்லையில் நடாத்தியது. கூட்டத்திற்கு கழகத்தின் கிளைத்தலைவர் எல்லாளன் தலைமை தாங்கினர். ஈழவேந்தனின் கொடியேற்ற நிகழ்ச்சியுடன் கூட்டம் தொடங்கியது.

கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளைத்தலைவர் ஈழவேந்தன் அவர்கள் தனது உரையில் கூறியதாவது:-

"மலையகத் தமிழ் மக்களாகிய உங்களுக்கு ஒருபெரும் உண்மையை-அது கசப்பான உண்மையாக இருந்தாலும் அதனைக் கூறவேண்டியது எனது கடமையாகும். உங்களுடைய குடியுரிமையை, வாக்குரிமையை, நிலவுரிமையை வஞ்சனைப்போக்குடன் பறித்த சிங்கள அரசுகள் காணிச் சீர்திருத்தம் என்ற போர்வையிலும் தோட்டங்களை நாட்டுடமைகள் ஆக்குகிறோம் என்ற போர்வையிலும் உங்கள் நிலவுரிமைக்கு உலை வைத்துவிட்டது. நீங்கள் முன்பு போல் தோட்டங்களில் வாழமுடியாது வெளியேற்றப்படுகின்ற காட்சியை கண்கள் கலங்கிய நிலையிலே நான் காண்கின்றேன். இப்படியொரு நெருக்கடியான ஒரு சூழ்நிலையை உருவாக்கி இந்தியாவுக்கு உங்களைக் கப்கப் ஏற்றுவது அரசாங்கத்தின் உள்நோக்கம் — சதி நோக்கம் என்பதனை நீங்கள் உணரவேண்டும்.

"இந்தியாசெல்வதனால்நீங்கள் உங்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கப்போவதில்லை. மாறாக மக்கட்தொகை மிஞ்சிய தமிழ் நாட்டுக்கு நீங்கள் ஒரு பிரச்சினையாக விளங்குவீர்கள். அங்குள்ள மக்களின் பசியையும் பட்டினியையும் தீர்க்கமுடியாது தமிழ் நாட்டு அரசும், மத்திய அரசும் தவிக்கிறது. தமிழ் நாட்டில் வாழும் தமிழர்க்கு அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எண்ணிக்கைப் பெருக்கம் தேவையில்லை. ஆனால் இங்கு வாழும் தமிழர்களைப்பொறுத்த வரையில் ஏற்கனவே சிறுபான்மையினமாக இருப்பதன் காரணமாக பல இன்னல்களுக்கு ஆளாகியுள்ளநாம்ஒவ்வொரு மலையகத்தமிழனும் தமிழச்சியும் கப்பல் ஏறுகினற போது நாம் மேலும் பலவீனம் முறுகிறோம் — வலிவு குன்றுகிறோம். ஈழம் வாழ் தமிழர் இந்நாட்டில்தொடர்ந்து தமிழர்களாக வாழவேண்டுமெனின் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் வேண்டாம் என்று பிரச்சாரம்செய்யும் நாம் மேலும் உங்களை இழப்பதற்கு ஆயித்தமாயில்லை.

வடக்குக் கிழக்கை உள்ளடக்கும் எம் தமிழ் ஈழத்தில் நிலவளம் உண்டு. நீர்வளம் உண்டு. பொருள்வளம் உண்டு. ஏன் அருள் வளமும் உண்டு. இந்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணியை பேணிக்காப்பதோடு நாடு அடையயிருந்த வங்குரோத்து நிலையை தடுத்து நிறுத்திய பெருமை தமிழ் ஈழத்திற்கும், தமிழ் ஈழத்தில் வாழும் உழைப்பாளிகளாகிய தமிழர்களுக்கே உரியது என்பதனை நீங்கள் உணரவேண்டும்.

"வடக்குக்கிழக்கில் பயன்படுத்தப்படாதகாட்டு நிலங்கள் ஏராளம் உண்டு. உழைப்புக்குப்பெயர் போன நீங்கள் உழைப்பாலேயே உயர்ந்து. இந்நாட்டையும் வாழ்வித்த நீங்கள் ஆயிரக்கணக்கில் தமிழ் ஈழத்தில் வந்து குடியேறுவீர்களாயின் உங்களுக்கும் வாழ்வுண்டு, எங்களுக்கும் வாழ்வுண்டு.

ஈழவேந்தனை அடுத்து உரை நிகழ்த்திய ஆ. இரகுபதிபாலசிறீதரன் (தலைவர் தமிழ் இளைஞர் பேரவை கொழும்பு) வடக்குக்கிழக்கு மாகாணத்தை உள்ளடக்கிய பல தமிழ்இளைஞர்கள் தமிழ் இனத்தை வாழ்விக்க சிறைச்சாலையை தவச்சாலைகளாக்கி ஆண்டுக்கணக்கில் சிறைவாழ்வை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அவர்கள் தங்களை தியாகத்தீயில் உருக்கியபடி வாழ்கிறார்கள். அவர்கள் அண்மையில் மேற்கொள்ளவிருக்கும் சாகும்வரை இருக்கும் உண்ணாவிரதம் எமக்கு ஒரு அறை கூவலாக விளங்குகிறது. தம் உயிரை துச்சமென மதித்து தம்மையே அவர்கள் அர்ப்பணிக்கையில் நாம் ஏனோதானோ வென்று வாழமுடியுமா? அவர்கள் செய்கின்ற தியாகம் வீண்போகாது பலன் உடையதாக விளங்க நாமும் எம்மால் இயன்றளவு எம் இனத்தின் விடுதலைக்காக எம்மை அர்ப்பணிக்க ஆயத்தமாக இருக்கவேண்டும்" என்றார்.

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் துணைச்செயலாளராக விளங்கும் திரு. எஸ். செங்கரட்ணம் உரை நிகழ்த்துகையில் இலங்கைத் தொழிலாளர் கழகம் ஒன்றுதான் தமிழினத்தின் வருங்காலம் பற்றி குறிப்பாக மலையகத் தமிழ் மக்களுடைய நிலையான வருங்காலம் வட, கிழக்கு மாகாணங்களில் வதியும் தமிழ் மக்களுடன் இணைந்து பிணைந்து வாழ்வதில்தான் வாழ்வுண்டு என்பதனை உணர்ந்து மொழியால் பண்பாட்டால் நாகரிகத்தால் வாழ்க்கை நெறியில் ஒன்றுபட்ட தமிழ் இனத்தின் ஒற்றுமையைப் பேண உழைத்துவருகிறது. ஆகவே மலையகத் தமிழ் மக்கள் அனைவரும் இ. தொ. கழகத்தில் அணிதிரளவேண்டும்" என வேண்டினார்.

# 'இளைஞர் வடிக்கும் கண்ணீர் அநீதியை சுட்டுப்பொசுக்கும்!'

## கல்முனையில் இராசதுரை பேச்சு!

'நாங்கள் ஒரு சிறுபான்மை இனமென்ற மாயையிலிருந்து விடுபட்டு, ஒரு தேசிய இனம் என்ற அந்தஸ்தைப் பெற்று எங்கள் தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை நோக்கி இன்று சத்தியப் பாதையிலே நடைபோடுகிறோம். இந்தப் போரில் வெற்றி எங்கள் பக்கமே சேரும்."

இவ்வாறு சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யக் கோரும்முகமாக கல்முனையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டத்தில் பேசிய திரு. செ. இராசதுரை பா. உ. குறிப்பிட்டார். திரு. பொ.வி. கந்தையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. இராசதுரை மேலும் கூறியதாவது:.

"கடந்த 4 ஆண்டுகளாக சங்களச் சிறையில் செந்தமிழ் பேசும் இனத்திற்காக சித்திர வதைகளைத் தாங்கியபடி எங்கள் தமிழ் இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் குற்றம் செய்தால் அவர்களை நீதிமன்றத்துக்கு கொண்டுவாருங்கள். அதை விடுத்து எதுவித விசாரணையுமின்றி இந்த இளைஞர்களை சிறையில் தள்ளி கொடுமைப்படுத்தும் மனிதாபிமானமற்ற இலங்கை அரசை எதிர்த்து தமிழன் ஒவ்வொருவனும் கொதித்துக் குமுறுகிறான். சிறையில் இந்த இளைஞர்கள் விடுகின்ற பெருமூச்சும் வெளியே அவர்கள் குடும்பத்தினர் வடிக்கின்ற கண்ணீரும் கொடுமையாளர்களை நிச்சயம் சுட்டுப்பொசுக்கியே தீரும்."

இஸ்லாமிய இணைப்புப் பேரவைத் துணைச்செயலாளர் திரு. மருதூர்வாணன் பேசுகையில்—

"பட்டிப்பளை பிரதேசத்திலுள்ள இஸ்லாமியத் தமிழர்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களை சிங்களவர்கள் சுவீகரித்துக் கொண்டு இஸ்லாமியர்களை துரத்தியடிக்குமட்டும், சிங்கள ஆட்சியின் அடி நக்கி வாழ்ந்த இஸ்லாமியத் தலைவர்களை, இஸ்லாமியத் தமிழர்கள் ஒருபோதுமே ஏற்கமாட்டார்கள்" என்றார்.

சட்டத்தரணி சாம் தம்பிமுத்து, திருமதி கலா தம்பிமுத்து டாக்டர் உதுமாலெப்பை ஆகியோருட்படபலர் சொற்பொழிவாற்றினர்.

# மகாஜன தமிழ் மாணவர் எடுத்த மறைமலையடிகள் நூற்றாண்டு விழா!

"தமிழகத்தை ஆட்கொள்ளவென வடநாட்டிலிருந்து தெற்கு நோக்கி வந்த வடமொழி வெள்ளம், தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகளால் தடுத்து நிறுத்தப்பட்டதன் விளைவாகத்தான் இன்று தமிழன் உண்மையான தமிழனாய் வாழமுடிகிறது."

என்று மகாஜனக் கல்லூரித் தமிழ் மாணவர் மன்றம் நடாத்திய, செல்வன். தங்கவேல் தலைமையில் நடைபெற்ற மறைமலையடிகள் நூற்றாண்டுப் பெருவிழாவிலே, சிறப்புச் சொற்பொழிவாற்றிய பண்டிதர் வ. நடராசன் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், "மறைமலையடிகள் காலத்திலே வடமொழி அரச ஆதரவைப் பெற்றிருந்தமையால் தமிழ் அறிஞர் பலரும் தமது நூல்களில் நல்ல தமிழ்ச் சொற்களிருக்க அவற்றுக்கீடான வடமொழிச் சொற்களையே பிரயோகித்தனர். இப்படி எழுதப்படும் நூல்களே அன்று மதிப்புப் பெற்றன. இந்நிலைமை தொடரின் தமிழ்மொழி வழக்கிழந்து, தூய்மையிழந்து சாகும் நிலை ஏற்படலாமென்பதாலேயே அடிகளார் பல எதிர்ப்புக்களுக்கு மத்தியில் தனித்தமிழ் இயக்கத்தை ஆரம்பித்து அமுல் செய்தார்.

அடிகளார் ஓர் சிறந்த தமிழ் அறிஞர்; வடமொழி விற்பன்னர்; ஆங்கில விற்பன்னர்; சமய நூலாசிரியர்; நூல் ஆராய்ச்சியாளர்; என்பவற்றுக்காகப் புகழ் பெறவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக தகுந்த வேளையில் தமிழைக் கட்டிக் காத்தமையாலேயே பெரும் புகழ் பெறுகிறார்" என்றார்.

அடிகளாரின் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்த அதிபர் திரு. பொ. கனக சபாபதி அவர்கள் பேசும்போது கூறியதாவது:—

"சென்ற நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்து தமிழுக்குப் பெருந்தொண்டு புரிந்தோர் இரு மலைகளே. ஒருவர் புதுமைப்பித்தன் திரு. விருத்தாசலம். மற்றவர் மறைமலை வேதாசலம்" என்றார். "அப்போதைய காலத்தில் தனித்தமிழில் கடினமான சொல்லாயிருந்தும் அடிகளார் செயற்படுத்தியமை அவரது திறமையாகும். அவர் தனித்தமிழியக்கத்தை ஆரம்பித்திராவிட்டால் இன்று தமிழரெல்லாம், தமிழினின்றும் வேறான ஏதாவதொரு கலப்பு மொழி பேசுபவராகவே இருந்திருப்பார்" என்றார்.

இறுதியாக நன்றி நவில வந்த புலவர் நா. சிவபாதசுந்தரனார் அவர்கள் "தமிழ் இன்று மாத்திரமல்ல, அன்றைய காலம் தொட்டே, பல எதிர்ப்புகளுக்கு மத்தியில்தான் போராடி,வாழ்ந்து வருகிறது. அன்றைய கால கட்டத்தில் தமிழுக்கு எதிராகச் சமயத்தின் ஆதரவுடன் கிளர்ந்தெழுந்த வடமொழியை அடக்கி, ஒடுக்கி, தமிழுக்குப் புத்துயிர் அளித்தவர் மறைமலையடிகளே.

மறைமலையடிகள் அவர்கள் தமது மகனை செந்தமிழ் விற்பன்னனுக்கு மணமுடிப்பதாக அறிவித்து செயற்படுத்தியமையும், தானே தூய தமிழில் பல நூல்கள் ஆக்கியமையும் அவரது செயற்படுத்தும் திறனையும், வலிமையையும் பறைசாற்றுகின்றன" என்றார்.

பெருவிழா மாணவிகள் தமிழ்மொழி வாழ்த்துப்பாவுடன் ஆரம்பித்து, ஆசிரியரின் தமிழணங்குப் பாவுடன் சிறப்புற முடிந்தது.

# சட்டக் கல்லூரித் தமிழ்மன்றத் தலைமை மீண்டும் தமிழணியிடம்

அண்மையில் நடைபெற்ற சட்டக்கல்லூரித் தமிழ் மன்றத்தின் அடுத்த ஆண்டு அலுவலர்க்கான தேர்தலில், தமிழணியின் சார்பில் போட்டியிட்ட திரு. அமுதன் இராஜகாரியர் வெற்றி பெற்றுள்ளார். எதிர்த்துப் போட்டியிட்ட திருவாளர்கள்: எஸ். சுரேந்திரனும், இ. த. விக்கினேஸ்வரனும் தோற்கடிக்கப்பட்டனர்.தமிழணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டியோர் விபரம் பின்வருமாறு:—

தலைவர்:- அமுதன் இராஜகாரியர். துணைத்தலைவர்:- செல்வி. காயத்ரி தர்மலிங்கம். பொருளாளர்:- செல்வி தேவரஞ்சினி யோகநாதன்.

ஜனாப் என். எம். காரியப்பர் ஏற்கனவே இதழாசிரியராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

தற்போதைய தலைவர் திரு. த. சிறீபதி தலைமையில் நடைபெற்ற வெற்றி விருந்தில் உரையாற்றிய திரு. அமுதன் இராஜகாரியர், "சட்டக்கல்லூரித் தமிழ் மன்றம் என்றும் தமிழ் மக்களின் விடுதலைக் குரலுக்குத் துணை நிற்கும்" என்று குறிப்பிட்டார்.

ஜனாப். அப்துல் லத்தீப் பீ. ஏ., எல். எல். பி. பேசும்போது, "மொழியாலும் கலாச்சாரத்தாலும் பழக்க வழக்கங்களாலும், திருமண முறைகளாலும் இணைந்த தமிழர்களும் முஸ்லீம்களும் தமிழ் மக்களின் உரிமைக்காக ஒரே அணியில் நின்று போராடவேண்டும் என்றும், சில சுயநலவாத முஸ்லிம் தலைவர்களால் இன்று முஸ்லிம் சமூகம் வேறு திசையில் இழுத்துச் செல்லப்பட்டுவிட்டது." என்றும் குறிப்பிட்டார்.

திரு. கனக மனோகரன் பேசும்போது, "பீடும் பெருமையும் பண்பாடும் கொண்டு வாழ்ந்த தமிழினத்துக்கு இன்று சூடும் சொரணையும்தான் தேவையாக இருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

மற்றும் இராஜன் செல்லத்தம்பு, தியாகேந்திரன் (தற்போதைய துணைத்தலைவர்) ஆகியோரும் பேசினார்கள். மன்றத்தின் சார்பில் மன்றத்தின் தற்போதைய செயலாளர், இ. வசந்தசேனன் நன்றியுரை வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு தேர்தல் இயக்கமல்ல!

# நான் அடுத்துவரும் தேர்தலுக்கு ஆள்சேர்க்க வரவும் இல்லை!

# மக்கள் பணத்தில் வாங்கிய 'பென்ஸ்' காரில் பவனி வந்து சோசலிசம் பேசவும் இல்லை!

## திருநகர் கூட்டத்தில் திரு. ஆனந்தசங்கரி முழக்கம்



'தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு தேர்தல் இயக்கமும் அல்ல. தேர்தலுக்காக தோற்றுவிக்கப்பட்டதுமல்ல — விடுதலையில் நாட்டம் கொண்ட ஒரு புனிதமான இயக்கம். இங்கே தியாகிகளுக்கும், — போராட்ட வீரர்களுக்கும்தான் இடமே ஒழிய, இ.போ.ச., பெற்றோல் பம்பர் வேலைக்கும், பஸ்கழுவுகின்ற வேலை தேடுவோருக்கெல்லாம் இங்கு இடமில்லை.

இவ்வாறு கடந்த 25-7-76 ஆம் திகதி திருநகர் கிராம முன்னேற்றச் சங்க மைதானத்தில் திரு. வே. கணேசபிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கிளிநொச்சி தேசியப் பேரவை உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரி வீரமுழக்கமிட்டார், திரு. ம. சூ. தம்பிநாயகத்தின் தமிழ் ஈழத் தேசிய கீதத்துடன ஆரம்பமான இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசியதாவது:-

மட்டக்களப்பு மண்ணிலே பிறந்து — இந்தியாவிலே கல்விபயின்று — ஏறத்தாழ மாதம் 1000/- ரூபாவரை ஊதியம் பெற்ற கவிஞர் காசிஆனந்தன் தனது தன்மான உணர்வால் — இக்கொடிய அரசியல் சட்டத்துக்கு விசுவாசமாக இருக்க மாட்டேன், என்று தனது பதவியைத்துறந்து ஏறத்தாழ 35 நாட்கள் இடைவெளிக்குப் பின்னர் 4 ஆண்டுகளுக்குமேல் சிறையிலே வாடுகின்றுனே எதற்காக?... ஆனல் இங்கோ இனத்தை விற்று — மொழியைவிற்று— வயிறு கழுவுவதற்காக 'பஸ் கழுவுகின்ற, பம்பர் வேலைகளுக்கும், — சங்கக்கடை உத்தியோகங்களுக்கும் — சூரியரின் பின்னல் சுற்றுகின்றுர்களே இவர்களை— கவிஞன் காசிஆனந்தன், மாவை சேனதிராசா வண்ணை ஆனந்தன் போன்றவர்களுடன் ஒப்பிடும்போது அவர்களுடைய கால்தூசு கூடப்படுவதற்கு அருகதையற்றவர்களாகவே இருக்கின்றுர்கள்.

"இத்திருநகர் வீதிக்கு என்னல் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் ஒரு இலட்ச ரூபாவையும், தான்தான் ஒதுக்கீடு செய்தது என்று சொல்லும் குமாரசூரியர் த[illegible]லேயே ஒதுக்கீடு செய்யப்ப[illegible]து என்று நிரூபித்தால் எனது பா. உ. பதவியை துறக்கவும் ஆயத்தமாக இருக்கின்றேன். அவரால் இது நிரூபிக்கப்படாவிட்டால் இனிமேலாவது தமிழினத்துக்கு ஆட்சியாளராலும்—இவராலும் இழைக்கப்பட்டுவரும் துரோக வேலைகளில் ஈடுபடாமல் தன்மானத்துடன் இருப்பாரா? என்று கேட்கின்றேன்.

"தமிழ் பகுதிகளின் அபிவிருத்திகளுக்கு பணம் ஒதுக்கீடு செய்யாமல் புறக்கணித்து வந்த அரசாங்க[illegible] எமது வற்புறுத்[illegible] பேரில் இவ்வாண்டு நூற்றி அறுபது (160) லட்சம் ரூபாவை வடமாகாணத்துக்கு ஒதுக்கியிருந்தது. அதில் வட்டுக்கோட்டை தவிர்ந்த ஏனைய பா. உ. அனைவரும் ஒத்துழைத்து எனது தொகுதிக்கு 40இலட்சம் ரூபாவை ஒதுக்கீடுசெய்தார்கள். இப்பணமே எனது தொகுதியின் அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் ஒரு லட்ச ரூபாவையே திருநகர் வீதிக்கு ஒதுக்கீடுசெய்துள்ளேன். இப்பணத்தை ஒதுக்கீடு செய்யக்கூடிய வராகசூரியர் இருந்தால் சுழிபுரம் தபால் நிலையத்துக்கு அம்மாவிடம் மண்டியிட்டு அத்தனகலையில் இருந்து லட்ச ரூபா கொண்டு வரத் தேவையில்லையே!

"மாடிவீட்டு சோசலிசம் பேசும் குமாரசூரியர் பவனி வரும் 'பென்ஸ்'கார், மக்களின் வரிப்பணத்தில் வாங்கப்பட்டதாகும். இக்கார் தபால்—தந்திப் பகுதிக்குச் சொந்தமாக இருந்து, இப்பகுதிக்கு தேவையில்லையென இவரால் நிராகரிக்கப்[illegible]டு — அரசாங்க "ஸ்ரோருக்கு" மாற்றப்பட்டு —இப்பொழுது இவரின் சொந்தப் பாவிப்புக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான மக்களின் பணத்தில் வாங்கப்பட்ட "பென்ஸ்காரில்"பவனிவந்து கொண்டு சோசலிசம்பேசும் இவர்களா, நாங்களா உண்மைச் சோசலிசவாதிகள்"?

இக்கூட்டத்தில் திருவாளர்கள்: ஐ. திருஞானம், மூ. கிருஷ்னராசா, கே. ஏகாம்பரம், எஸ். ஜெயபாலன், ம. நீக்கிலாஸ், ஆகியோரும் சொற்பொழிவாற்றினர் திருநகர் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைக்கு பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. ச. அன்ரன் உபதலைவர்: திரு. சி. வேல்முருகு, காரியதரிசி: வே. கணேசபிள்ளை பொருளாளர் வீ, இராசலிங்கம், இ. வேலுப்பிள்ளை பொ. சாமித்தம்பி, ம. சீலன், வி. ஜெகநாதன், க. பொன்னுத்துரை ஆகியோரைகொண்ட நிருவாக சபையும் அமைக்கப்பட்டது.

— வட்டக்கச்சியான்

# தமிழ் ஈழமடங்கிலும் அனுதாப உண்ணா...

1-ம் பக்கத் தொடர்

**இளைஞர்களுக்கு விடுதலை அல்லது நீதிவிசாரணை கிடைக்காது — அவர்களுடைய சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் தமிழ் ஈழத்தில் சகல நிர்வாகங்களும் ஸ்தம்பிக்கும் வகையில் தீவிர இயக்கத்தை நடத்துவதென தமிழர் விடுதலைக்கூட்டணி ஏற்கெனவே அதன் திருக்கோணமலை மாநாட்டிலே பகிரங்கமாக அறிவித்திருக்கிறது.** அதற்கமைய தீவிர இயக்கங்களை ஆரம்பிப்பதற்குரிய திட்டங்கள் போராட்டக்குழுவினல் தீட்டப்பட்டு விட்டன.

சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் சாகும்வரை உண்ணாவிரதத்துக்கு அனுதாபம் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் அனுதாப உண்ணாவிரதங்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணியின் பா.உ.க்களும், பிரமுகர்களும், நடவடிக்கைக் குழு உறுப்பினர்களும், பொதுமக்களும் இந்த அனுதாப உண்ணாவிரதங்களில் பங்குபற்றுகிறுர்கள்.

### மட்டக்களப்பில்...

கவிஞர் காசி ஆனந்தன் பிறந்த மண்ணுன மட்டக்களப்பில் தமிழ் இளைஞர் பேர்வையின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையினர் 7-8-76ல் அடையாள உண்ணாவிரதமொன்றை நடத்துகிறுர்கள். மட்டக்களப்பிலுள்ள விபுலானந்தர் சிலை முன்னல், 7-8-76 சனிக்கிழமை மாலை 6மணி முதல், 8-8-76 ஞாயிறு மாலை 6மணி வரை நடைபெறும் இந்த அனுதாபஉண்ணாவிரதத்தில் 100 க்கு மேற்பட்ட இளைஞர்கள் பங்குபற்றுவார்கள்.

### குருக்கள் மடம்

5-8-76 வியாழக்கிழமை காலை முதல் மாலைவரை, குருக்கள் மடம் செல்வக் கதிர்காம சுவாமி ஆலய முன்றலில் பட்டிருப்புத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவையின் மத்திய கிளையினர் அனுதாப உண்ணாவிரதம் மேற்கொள்ளுகிறுர்கள்.

### கொழும்பு

தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையினர் தங்கள் அனுதாப உண்ணாவிரதத்தை 6-8-76ல் நடத்துகிறுர்கள். தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக் கிளையினர் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களுக்கு இறைவனின் அருள்வேண்டி கூட்டுப் பிரார்த்தனையிலீடுபடவிருக்கிறுர்கள்.

### தாந்தாமலை

பட்டிருப்பு தொகுதியைச்சேர்ந்த தாந்தாமலை முருகன் கோவிலில் 8-8-76ல் கவிஞர் காசிஆனந்தனின் பெயரினல் ஏழைகளுக்கு இலவச அன்னதானம் வழங்கப்படவிருக்கிறது. மண்முனை தென்மேற்கு தமிழ் இளைஞர் பேரவையினரும், கூட்டணி ஆதரவாளர்களும் இந்த அன்னதானத்துக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

### திருமலையில்...

சிறையில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவுதெரிவித்து ஒரு நாள் அனுதாப உண்ணாவிரதமொன்றை திருகோணமலை தமிழ் இளைஞர்பேரவையினர் 6-8-76 வெள்ளிக்கிழமை திருக்கோணமலை காளிகோவில் முன்றலில் அனுட்டிக்கின்றனர்.

### யோகபுரத்தில்

தமிழ் இளைஞர்பேரவையின் யோகபுரம் கிளை சிறையிருக்கும் இளைஞர்களின் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்து மல்லாவி கந்தசாமி கோவில் முன்றலில் 5-8-76 வியாழனன்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தையும் கருத்தரங்கையும் நடத்துகிறது. கருத்தரங்கில் கிளிநொச்சி பா.உ. வி. ஆனந்தசங்கரி பேசுவார்.

## தமிழ் ஈழப் பிரி

—1-ம் பக்கத் தொடர்

இளைஞர் நிதிக்காக உண்டியல் மூலம் நிதியும் சேகரிக்கப்பட்டது. வவுனியாவில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளைப் பின்னர் பொலிசார் கிழித்தெறிந்தார்கள்.

### அடுத்த நடவடிக்கை

ஆயிரக்கணக்கானேர் பங்குபற்றிய இச்சட்ட மறுப்பு இயக்கம் பூரண வெற்றியளித்துள்ளதையடுத்து தனது அடுத்த நேரடி நடவடிக்கையிலிறங்க தமிழர் விடுதலைக்கூட்டணி தயாராகி வருகிறது அடுத்த நடவடிக்கை ஏற்கெனவே போராட்டக் குழுவினல் தயாரிக்கப்பட்டுவிட்டதென்றும், அதை எந்நேரமும் போராட்டக்குழு பகிரங்கப்படுத்தும் என்றும் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

## மட்டக்களப்பு, அம்பாறை....

—4-ம் பக்கத் தொடர்

ஞர்களுக்கு நிதி உதவக் கோரும் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்ததாக திருகோணமலையைச் சேர்ந்த இளைஞர்கள் பாலசுந்தரம், சிறீஸ்கந்தராசா, குமார், ராமச்சந்திரன், பூவேந்திரன் ஆகியோர், 28-7-76 இரவு 9மணிக்கு கைதுசெய்யப்பட்டு திருகோணமலை. பா. உ. திரு. நேமிநாதனின் தலையீட்டினல் அன்று இரவு 1மணிக்கு விடுதலைசெய்யப்பட்டார்கள்.

### காவலூர் தொகுதியில்...

ஊர்காவற்றுறைத்தொகுதியில் சுவரொட்டிப் போராட்டம் 31-7-76 சனி காலை 8-00 மணிக்கு புங்குடுதீவு பெருங்காடு கந்தசாமி கோயில் சந்தியிலிருந்து தொடங்கியது. கவலூர் பா. உ. தலைமையில் இளைஞர் பேரவையினரும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களும் பதினைந்து இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டினர். புங்குடுதீவு வேலணைச் சந்தி, புளியங்கூடல் சந்தி, கரம்பொன்சந்தி, ஊர்காவற்றுறைப்பட்டினச் சந்திகள், ஊர்காவற்றுறைத் துறைமுகம் முதலிய இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

## உண்ணாவிரதம் இருக்கப்போகும் இளைஞர்களை சந்திப்பதற்கு அனுமதி மறுப்பு

ஆகஸ்ட் 5ம் திகதி உண்ணாவிரதம் இருக்கப்போகும் தமிழ் இளைஞர்களை அவர்களது குடும்பத்தினர் போய்ச்சந்திப்பதற்கு சிறை நிர்வாகம் அனுமதி மறுத்துள்ளது. திரு. த. முத்துக்குமார சுவாமியின் சகோதரி செல்வி. தம்பித்துரை தனது சகோதரரை பார்ப்பதற்காக சென்றபோது உண்ணாவிரதத்தைக் காரணம் காட்டி அனுமதி மறுக்கப்பட்டதாம். ஆகஸ்ட் 5ல் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்போகும் இளைஞர்களில் முத்துக்குமாரசுவாமியும் ஒருவர் என்பது தெரிந்ததே;

# மட்டக்களப்பு அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் 25 இளைஞர்கள் கைது!

## பொலிசார் கிழித்த பின்னரும் சுவரொட்டிகளை ஒட்டினர் இளைஞர்கள்!

**மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தும் சட்டமறுப்பு சுவரொட்டிகளை ஒட்டும் இயக்கம் மிகவும் விறுவிறுப்புடன் நடைபெற்றது. இந்த இயக்கத்தின்போது 25 இளைஞர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.**

மட்டக்களப்பு முதல்வர் செ. இராசதுரை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் துணைத்தலைவர் மு. மாணிக்கம் ஆகியோர், சட்டத்தரணி சாம் தம்பிமுத்து, திருமதி கலா தம்பிமுத்து மற்றும் கூட்டணி ஆதரவாளர்கள் சகிதம், பிரிவினை கோரும் சுவரொட்டிகளை மட்டக்களப்பு மாநகரத்தின் முக்கிய இடங்களில் ஒட்டினர். திரு. இராசதுரை உதயசூரியன் சால்வையுடன் காணப்பட்டார்.

மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவையினரும் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் கா. அன்ரன் தலைமையில் இதே சுவரொட்டிகளை மட்டுநகர் வீதிகளில் ஒட்டினர். காலையில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை மத்தியானம் பொலிசார் கிழித்து எடுத்துவிடவே, இவ்விளைஞர்கள் மாலையில் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் பிரிவினைச் சுவரொட்டிகளை ஒட்டினார்கள். அப்போது அவற்றை ஒட்ட வேண்டாம் என்று அங்கு வந்த பொலிசார் தடுத்தும் அதை மீறி ஒட்டவே, தங்கவேலாயுதம், மோகனச் சந்திரன், பரமதேவா, விஜயரத்தினம் ஆகிய இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்து பொலீஸ் நிலையத்துக்கு இவர்களைக் கொண்டு சென்று மூன்று மணித்தியாலம் அங்கு வைத்து தூஷண வார்த்தைகளால் சங்களத்தில் ஏசிவிட்டு பின்னர் இவர்களை பொலிசார் விடுதலை செய்தனர்.

தமிழ் இளைஞர் வாரத்தையொட்டி தமிழ் இளைஞர் பேரவையின் மட்டக்களப்பு கிளையினர் 31-8-76 காலையில் ஒழுங்கு செய்திருந்த கருத்தரங்கில் திருவாளர்கள் ஈழவேந்தன், இரகுபதி பாலசிறீதரன், சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் ஆகியோர் உரையாற்றினர்.

மட்டக்களப்பு முற்றவெளியில் திரு. மு. மாணிக்கம் தலைமையில் மாலை நடைபெற்ற கூட்டத்தில் திருவாளர்கள் செ. இராசதுரை, சட்டத்தரணி சாம் தமபிமுத்து கலா தம்பிமுத்து, டாக்டர் உதுமாலெவ்வை ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்.

### விசாரணைக் குழுத் தலைவரை மடக்கினார் நித்தி!

“தாம் ஏன் கைது செய்யப்பட்டோம் என்பதையறியாது தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டார்கள். தாம் கைது செய்யப்பட்டது எதற்காக என்பதை அறிவதற்கு விசாரணையொன்றை வைக்கும்படி தம்பி நித்தியானந்தனும் வேறு சில இளைஞர்களும் சிறை அதிகாரிகளுக்கு விண்ணப்பம் அனுப்பியிருந்தார்கள். அவர்களது விண்ணப்பங்களை விசாரிக்கும்போது அவர்களது சார்பில் சட்டத்தரணிகளாக நானும் சிவசிதம்பரம், அமிர்தலிங்கம், கதிரவேலுப்பிள்ளை ஆகியோரும் ஆஜராகியிருந்தோம். இளைஞர் நித்தியானந்தன் மீதான விசாரணை தொடங்கியபோது, விசாரணைக்குழுத் தலைவரிடம் என்னை ஏன் கைது செய்து சிறையில் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டார் நித்தி. அவர் உடனே கோவைகளைப் புரட்டிப் பார்த்து விட்டு, “யாழ்ப்பாணத்தில் தொழிற் சங்கவாதி சிவசோதியின் வீட்டிற்கு கைக்குண்டு வீசியதற்காக என்றார். உடனே நித்தி, சம்பவம் நடைபெற்ற திகதியில் நான் யாழ்ப்பாணம் சிறையில் அல்லவா வைக்கப்பட்டிருந்தேன். சிறையில் இருந்த நான் எப்படி கைக்குண்டு வீசியிருக்கமுடியும் என்றார். உடனே விசாரணை அதிகாரி மீண்டும் கோவைகளைப் புரட்டி விட்டு, ஆம், ஆம் நீர் சொல்வது சரிதான் என்றார். பொலிசார் இப்படித்தான் தவறான தகவல்களைக் கொண்டு இளைஞர்களை அநியாயமாகக்கொடுமைப் படுத்துகிறார்கள்”

—வி. என்- நவரத்தினம் பா. உ.
(இளைஞர் வரவேற்பு கூட்டத்தில்)

#### கல்முனையில்

கல்முனையில் சட்டமறுப்பு சுவரொட்டிகளை ஒட்டிய சமயம், திரு. பொ. வி. கந்தையா டாக்டர் உதுமாலெவ்வை, வேல்முருகு ஆகியோர் கல்முனைப்பொலிசாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலைசெய்யப்பட்டனர்.

#### அக்கரைப்பற்றில...

அக்கரைப்பற்றிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர்கள் சட்டமறுப்பு சுவரொட்டிகளை ஒட்டிய சமயம், அவர்களில் 12பேர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். இ. நடராசா, க. மார்க்கண்டு, கி. சதாசிவம், ச. தர்மலிங்கம், நா. முருகன், ச. கணபதிப்பிள்ளை, க. தம்பிராசா, க. பேரின்பராசா, கி. குலசேகரம் ம. சுந்தரமூர்த்தி, மு. கிருஷ்ணமூர்த்தி, தா. நேசராசா ஆகியோரே இந்தப் 12 இளைஞர்களாவர்.

#### களுவாஞ்சிக்குடியில்..

களுவாஞ்சிக்குடியில் திரு. பூ. கணேசலிங்கம் அவர்களினால் ஒட்டப்பட்டிருந்த தமிழ் ஈழச்சுவரொட்டியை பொலிசார் கிழிக்க முயன்றபோது, அதைத்தடுக்க முயன்ற க. அமரசிங்கம் என்ற வீர இளைஞர் களுவாஞ்சிக்குடி பொலிசாரினால் கைது செய்யப்பட்டு மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார்.

#### ஐந்து கருத்தரங்குகள்

தமிழ் இளைஞர் பேரவையினால் பட்டிருப்புத் தொகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஐந்து கருத்தரங்குகள் முறையே களுதாவளை, துறைநீலாவணை, குருக்கள் மடம், திருப்பழுகாமம், கோட்டைக்கல்லாறு ஆகிய இடங்களில் 31-7-76, 1-8-76 ஆகிய நாட்களில் நடைபெற்றபோது, அவற்றில் கலந்துகொண்டு திருவாளர்கள் கோவை மகேசன், ஈழவேந்தன், ரகுபதி பாலசிறீதரன், பூ. கணேசலிங்கம், இரா. மதுரநாயகம், ஆ. தங்கவேலாயுதம், கணேசபிள்ளை, முத்துப்பிள்ளை ஆகியோர் கொள்கை விளக்கம் அளித்தார்கள்.

#### திருகோணமலையில்..!

திருகோணமலையில் சட்டமறுப்பு சுவரொட்டிகளை திருகோணமலை பா. உ. திரு. பா. நேமிநாதனும், 10 தொண்டர்களும், நகரின் முக்கிய இடங்களில் ஒட்டினார்கள் பெரியகடை. சந்தியில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டியைப் பொலிசார் கிழித்தனர். இதற்கு முன் சிறையிருக்கும் தமிழ் இளை

—3-ம் பக்கம் பார்க்க

### எங்கள் பிணத...

—1-ம் பக்கத் தொடர்

இளைஞர்களாகிய தம்மை ஒன்றில் விடுதலைசெய்ய வேண்டும்—அன்றேல் நீதிமன்றவிசாரணைக்குட்படுத்த வேண்டும்; இந்த இரண்டில் ஒன்றைச்செய்யத்தவறினால் ஆகஸ்ட் 5 இல்லிருந்து தாம் சாகும்வரை உண்ணாவிரத இயக்கத்தை ஆரம்பிக்கப் போவதாக இந்த இளைஞர்கள் பிரதமருக்கு கடிதமூலம் பகிரங்கமாக அறிவித்திருப்பது தெரிந்ததே.

இளைஞர்கள் விதித்தகெடு நாளை 5ந் திகதியுடன் முடிவடைகிறது. இதுவரை 15இளைஞர்கள் நிபந்தனையுடன் விடுதலைசெய்யப்பட்டும், 7இளைஞர்கள் மீது குற்றப் பத்திரிகை சுமத்தப்பட்டுள்ள போதிலும்—இன்னும் 29 இளைஞர்கள் விசாரணையேதுமின்றி தொடர்ந்து சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

சாகும் வரை உண்ணாவிரதத்தில் பங்குபற்றவிருந்த 23இளைஞர்களில் இராசகுலசூரியர் இ. ஜெயராசா, எஸ். சபாரத்தினம், எம். பாலரத்தினம் எஸ். குலசிங்கம், ஆர். பாலேந்திரன், அ. நித்தியானந்தன் ஆகிய ஏழு இளைஞர்கள் ஏற்கெனவே விடுதலை செய்யப்பட்டு விட்டபோதிலும்— திட்டமிட்டபடி ஏனைய 16 இளைஞர்களும் உண்ணாவிரதத்தை படிப்படியாக ஆரம்பிக்க விருக்கிறார்கள்.

தங்கள் உண்ணாவிரதத்தையொட்டி இந்த இளைஞர்கள் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இறுதியில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்களாம்.

“என்றோ ஒருநாள் போகப் போகின்ற உயிர் அதுவும் ஓர் முறைதான் — தமிழ் ஈழத்தாயகத்தின் விடுதலைக்காகப்போகட்டும். நோயினால் இறக்கவில்லை; இறக்கின்ற முதிர்ச்சியினால் சாகவில்லை; வாழவேண்டிய வயதில் எத்தனை நாள் சிறைகளிலே அடிமைகளாய் அழிவது? தமிழன் சாகிறான். அவன் அடிமையாகச் சாகவில்லை. ஏன் அவன் ஒருநாள் சுதந்திரத்திற்காகச் சாகிறான். இது இலட்சிய மரணம். எம்மைப் பெற்றெடுத்த தாயை — உடன்பிறப்புக்களை உற்றாரைப் பிரிந்திருக்கின்றோம். மரணத்தின்பின் முற்றாகப் பிரிகின்றோம். ஆனால் நாம் பிறந்தத் தமிழ் மண்ணை, தமிழன்னையை தமிழினத்தைவிட்டுப் பிரியப் போவது இல்லை; நாம் மீண்டும் தமிழராய்ப் பிறப்போம் — மீண்டும் போராடுவோம்!

“எமது மரணத்தின்பின்னராவது நீதியும் தர்மமும் வெற்றிபெறட்டும்! எமது மரணத்திலிருந்து சுதந்திரத்‘தீ’ பரவட்டும்!”

“பிரதமர் அவர்களே! எமது பிணத்தின்மீது உங்கள் கூட்டுச்சேரா நாடுகளின் மாநாடு நடைபெறட்டும்!”

பிரபல நாவலாசிரியர் கே. எஸ். ஆனந்தனின்
சாத்தான் வேதம் ஓதுகிறது!
புத்தம் புதிய சமூக தொடர் நவீனம்
சுடர் ஆடி இதழில் படியுங்கள்
விலை ரூபா 1-00 மட்டுமே

“ஆரோக்கியவானே
ஆனந்தமாக வாழ்கிறான்”
காலை, மாலை சுகந்த நறுமணத்திற்கு வேம்பில் இருந்து தயாரான நீம் சுகாதார தூபத்தையே பாவியுங்கள்.
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி 194 ஏ. இலக்கத்தில் 1976-ம வருடம் ஆகஸ்ட் மாதம் 4-ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org